**O.S. No. 195 /2023**

**Date:28.03 .2026**

**வா.சா. 1.முருகேஷ்வரி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சொந்தமான வீட்டை பிரதிவாதிகள் காலி பண்ணி கொடுக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது உடன் பிறந்தவர்கள் 1 சகோதரி அவர் பெயர் முருகம்மாள், 2 சகோதரர்கள், அவர்கள் பெயர் வடிவேலு, ஆறுமங்களம் . எனது சகோதரர் ஆறுமங்களத்தின் மனைவி தான் பிரதிவாதி என்றால் சரிதான்.எனது சகோதரர் ஆறுமங்களம் தீயணைப்பு துறையில் பணிபுரிந்து வருகிறார். 2012ம் ஆண்டு எனது சகோதரர் ஆறுமங்களத்திற்கும் பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். இந்த பிரதிவாதி எனது சகோதரர் ஆறுமங்களத்துடன் சென்னையில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எனது சகோதரர் ஆறுமங்களத்திற்கும் பிரதிவாதிக்கும் ஒரு மகன் உண்டு என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவருக்கு பல ஊர்களுக்கு பணி மாறுதல் காரணமாக குழந்தையுடன் பிரதிவாதி தபசில் வீட்டில் 2017 ஆண்டு முதல் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது சகோதரர் ஆறுமங்களத்திற்கும் பிரதிவாதிக்கும் இடையில் திருமண வாழ்க்கையில் பிரச்சனை ஏற்பட்டு அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ வில்லை என்றால் அது பற்றி தெரியாது. 2017ம் ஆண்டு முதல் எனது சகோதரர் ஆறுமங்களமும், பிரதிவாதியும் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் எனது பெற்றோருடன் நல்ல பேச்சுவார்த்தையில் உள்ளேன். எனது பெற்றோரும் , எனது சகோதரர் ஆறுமங்களமும் சேர்ந்து பிரதிவாதியை கொடுமை படுத்தியதாக சொல்லி சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து கு.எண். 7/2022 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனது சகோதரர் சொல்லி எனக்கு தெரியும்.2022ம் ஆண்டு இந்த பிரதிவாதிக்கும், அவரது குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு

சங்கரன்கோவில் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் MC 5/2022 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் எனது சகோதரர் சொல்லி தெரியும். எனக்கு 2016 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. 2016 ம் ஆண்டு முதல் நான் எனது கணவருடன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விஜயநாராயணம் என்ற ஊரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை முதலில் விஜயநாராயணம் என்ற ஊரில் தான் இருந்து என்றால் சரிதான் தற்போது எனது கணவரின் வீட்டு முகவரிக்கு மாற்றிவிட்டேன். தபசில் சொத்திற்கு எனது பெயரில் குடும்ப அட்டை இல்லை என்றால் சரிதான். எனது தந்தையின் தகப்பனார் பெயர் ராமசாமி என்றால் சரிதான். எனது தாத்தா ராமசாமிக்கு தபசில் சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் இல்லை. தபசில் சொத்து எனது தந்தை சுயாதீனமாக கிரையம் பெற்றதில்லை என்றால் சரிதான். தபசில் சொத்து எனது தகப்பனாரின் மூதாதையர்களிடமிருந்து வாரிசுபடி எனது அப்பாவிற்கு கிடைத்தது என்றால் சரிதான். தபசில் சொத்து ஆதியில் யார் பெயருக்கு பட்டா இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராது, நிரூபண உறுதி கூற்றில் எனது அப்பாவுக்கு தபசில் சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி தபசில் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாததால் தான் குறிப்பிடவில்லை. எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ. 1ன் படி தபசில் சொத்து என் தந்தைக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் தந்தைக்கு முன்னாடியே 2-3 தலைமுறைகளுக்கு முன்பே தபசில் சொத்து எனது தந்தையின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னாடிதான் போடப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பே பிரதிவாதி என் பெற்றோர் மீதும், எனது சகோதரர் மீதும் குற்றவியல் வழக்கு உள்ளது என்றால் சரிதான். அதேபோல் எனது சகோதரர் ஆறுமங்களம் மீது

இந்த பிரதிவாதி ஜீவனாம்சம் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் தபசில் சொத்து சம்மந்தமாக பாகபிரிவினை ஆவணமோ, அல்லது பாகபாத்திய விடுதலை ஆவணமோ பிறப்பித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அசல் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அசல் ஆவணத்தை நான் தாக்கல் செய்யாதற்கு எந்த காரணத்தையும் பிராது மற்றும் நிரூபண உறுதி கூற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அசல் எனது தந்தையிடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணம் 20.04.2023 அன்று காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்திற்கான நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 2 ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் சரிதான். மேற்படி புகார் மனுவானது தாவா சொத்தில் இருந்து பிரதிவாதியை காலி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் வீடு எனக்கு பாத்தியப்பட்டதாகோவ, எனது தகப்பனார் வா.சா.ஆ– 1 மூலம் எனக்கு பாத்தியப்படுத்திக்கொடுத்ததாகவோ நான் சொல்லிவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணம் தபசில்சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டவீட்டில் பிரதிவாதி குடியிருந்து வந்து காலி செய்ய மறுத்ததால் புகார் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்து பூர்வீக சொத்து என்பதால் எனது சகோதரர்கள் மற்றும் எனது சகோதரி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர் வழக்குரையில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. கூடுதல் எதிர் வழக்குரையில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டே வேண்டும் என்றே தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையில் தபசில் சொத்து பூர்வீக சொத்து

என்பதால் எனது உடன் பிறந்த சகோதரர்களுக்கும் எனது சகோதரிகளுக்கும் கூட்டாக பங்கு உரிமை உள்ள நிலையில் அதனை மறைத்து வா.சா.ஆ.1 ஆவணம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது உடன் பிறந்த சகோதரர்களுக்கும் எனது சகோதரிகளும் இந்த வழக்கிற்கு அவசிய கட்சி என்பதால் அவர்களை சேர்க்காத தோஷத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்போ அதன் பின்போ நான் எந்த காலத்திலும் தபசில் சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்து இரண்டு வீடுகளாக ஒட்டி கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு பழைய வீடு இடிந்து 2015 ம் ஆண்டு மீண்டும் கட்டப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா ஒரு அரசு ஊழியர் அவர் நகராட்சியில் பணியாற்றினார். எனது சகோதரர் வடிவேலு கூலி வேலை செய்து வருகிறார். தபசில் சொத்தில் உள்ள வீடு மற்றும் அதை சேர்ந்த வீடுகளை எனது சகோதரர்கள் இருவரும் சேர்ந்து கட்டியது என்றால் சரியல்ல. தபசில் சொத்தை ஒட்டி கட்டப்பட்டுள்ள வீட்டில் எனது சகோதரர் வடிவேலு குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது பெற்றோர் தனியாக வேறொரு வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தபசில் சொத்து பூர்வீக சொத்து என்பதால் பிரதிவாதியின் மகனுக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. எனது சகோதரர் ஆறுமங்களத்திற்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரதிவாதி எனது சகோதரர் ஆறுமங்களத்தின் மீதும், எனது பெற்றோர் மீதும் வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருப்பதால் பிரதிவாதியை பழிவாங்க வேண்டும் என கருதி வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு அதன் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பெயரளவிற்கு பிறப்பிக்கப்பட்ட ஆவணம் என்பதால்தான் அதன் அசல் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ஒருபோதும் ஊர்ஜீதத்திற்கு வராத காரணத்தினால் தான் நான் கொடுத்த புகார் மனுவில் தபசில் சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டதாக

கூறி என்னால் புகார் மனுகொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2022ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தின் பேரில் எனது பெயருக்கு வருவாய் துறையில் இருந்தும், சங்கரன்கோவில் நகராட்சியில் இருந்தும் எந்தவித பெயர் மாற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் உள்ள வீடானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 25 பவுன் தங்க நகைகளை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தை கொண்டு தான் மீண்டும் வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் தபசில் சொத்தை நான் அனுபவம் செய்து வருவதாக பொய்யான வழக்கு சங்கதிகளை கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.